அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல. 29/95 (iv)

எனது இல. 11/706 ஈ 206/56/டிஏ/32
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு – 07.

1999 நவம்பர் மாதம். 24 ஆந்திகதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணசபைகளின் தலைமைச் செயலாளர்கள்
திணைக்களத்தலைவர்கள் யாவர்க்கும்

**பயங்கரவாத அச்சுறுத்தல்கள் நிலவுகின்ற பிரதேசங்களில் சிவில் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு**

1995-09-22 ஆந் திகதிய 29/95 ஆம் இலக்க, 1996-05-20 ஆந் திகதிய 29/95 (1) ஆம் இலக்க, 1996-09-11 ஆந் திகதிய 29/95 (11) ஆம் இலக்கம் மற்றும் 1998-05-29 ஆந் திகதிய 29/95 (111) ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் பால் உங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரப் பிரதேசங்களில் சிவில் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அப் பிரதேசங்களில் சிவில் நிர்வாகம் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்ட திகதியிலிருந்து 2 வருடங்களுக்காக இவ் ஊக்குகை படி செலுத்த வேண்டும் என்ற வரையறையின் கீழ் 1997-11-12 ஆந் திகதிய 2/97 (111)ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட 1997-01-15 ஆந் திகதிய 2/97 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக புதிய சம்பளச் சுற்றறிக்கையின் படி திரட்டிய மாதச் சம்பளத்தின் 10% வீதத்துக்கு சமமான படியொன்றை ஊக்குகை படியாக செலுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு |
|---|---|
| பொலன்றுவை | 1. மெதிரிகிரிய |
| | 2. லங்காபுர |
| | 3. திம்புலாகல |
| | 4. தமன்கடுவ |
| அநுராதபுரம் | 1. நுவரகம்பலாத்த மத்தி |
| | 2. விலச்சிய |
| | 3. மதவாச்சி |
| | 4. கெபித்திகொல்லாவ |
| | 5. பதவிய/ வெலிஓயா (உப அலுவலக அதிகாரப் பிரதேசம்) |
| | 6. கஹட்டகஸ் திகிலிய |
| | 7. ஹொரோவுபத்தான |
| | 8. நொச்சியாகம |
| | 9. கலென்பிந்துனுவெவ |
| | 10. பளுகஸ்வெவ |
| புத்தளம் | 1. கல்பிட்டிய |
| | 2. வனாத்தவில்லுவ |
| | 3. கறுவலகஸ்வெவ |
| மட்டக்களப்பு | 1. பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவும் |

| | | |
|---|---|---|
| அம்பாறை | 1. | தெஹிஅத்த கண்டிய தவிர்ந்த பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவும் |
| திருகோணமலை | 1. | பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவும் |
| வவுனியா | 1. | பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவும் |
| மன்னார் | 1. | பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவும் |
| யாழ்ப்பாணம் | 1. | பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் |
| | 2. | தீவுகள் யாவும் |
| கிளிநொச்சி | 1. | பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவும் |
| முல்லைத்தீவு | 1. | பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவும் |
| மொனராகல | 1. | சியம்பலாண்டுவ பிரதேச செயலாளர் பிரிவு |

3. சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் சிவில் நிர்வாகம் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்ட திகதியை பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் அறிந்து கொள்ள வேண்டும்.

4. 1999.07.01 ஆந் தியதியிலிருந்து 1999.12.31 ஆந் திகதிவரை அல்லது பிரதேசத்தில் பயங்கரவாத செயல்கள் இல்லையென அரசு அறிவிக்கும் தினம் வரை ஆகிய இரண்டில் எது முந்துகிறதோ அன்றைய திகதி வரை மட்டும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டும்.

5. நிரந்தர சேவையில் உட்படாத அரச உத்தியோகத்தர்கள் தொடர்பில் இக்கொடுப்பனவு சம்பந்தப்பட்ட மாதத்தினுள் சேவையாற்றிய நாட்களை அடிப்படையாகக் கொண்டு செலுத்தப்பட வேண்டும்.

6. கொடுப்பனவுகளுக்காக வேண்டிய ஒதுக்கீடுகள் 1999ஆம் ஆண்டினுள் தற்போதைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளைச் கொண்டு செய்ய வேண்டும் எனினும் அவ் எல்லை மீறப்படலாகாது.

7. உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொள்கின்ற விடுமுறைகளுக்கும் ஆசிரியர்கள் பெற்றுக்கொள்ளும் விடுமுறைகளுக்கும் மேலதிகமாக பாடசாலை விடுமுறை காலத்திற்காகவும் இக் கொடுப்பனவு சரிசமமாக கழிக்கப்பட வேண்டும்.

8. பயங்கரவாத வன்செயல்கள் உள்ள பிரதேசத்தில் நிரந்தரமாக சேவையாற்றுகின்ற போதிலும் அப்பிரதேசங்களுக்கு புறம்பாக பயங்கரவாத செயல்கள் இல்லாத பிரதேசங்களில் சேவை/பயிற்சி என்பவற்றிற்காக செல்கின்ற காலத்திற்காக ஊக்குகை படி கொடுபடலாகாது.

9. பயங்கரவாத வன்செயல்கள் இல்லாத ஒரு பிரதேசத்தில் சேவையாற்றுகின்ற எனினும் அரசகடமைகளின் நிமித்தம் பயங்கரவாத வன்செயல்கள் உள்ள பிரதேசமொன்றில் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் அவ்வாறு சேவையில் ஈடுபடுகின்ற நாட்களின் விகிதாசாரப்படி ஊக்குகை படி செலுத்தப்பட வேண்டும். (பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு நாளொன்றுக்கு செலுத்த வேண்டிய படி 10% வீத முழுப் படியின் 1/20 க்கும் பதவிநிலை அல்லாத உத்தியோகத்தர் ஒருவருக்கு நாளொன்றுக்கு செலுத்த வேண்டிய படி 10% வீத முழுப் படியின் 1/30 பங்குக்கும் சமமாதல் வேண்டும்).

ஒப்பம்/ (மஹிந்த பந்துசேன)
செயலாளர்
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு